காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

Office on Missing Persons (OMP)

கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை பற்றிய
அறிவூட்டல் கையேடு

தமிழ் சிவில் சமூக அமையம்
2017

முதற்பதிப்பு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

- கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை -

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்குப் (குடும்பங்களுக்கு) பதிலளிப்பதற்காக அவர்களது கதியைக் கண்டறிய வழி செய்யும் ஒரு பொறிமுறையை உருவாக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதற்காக இலங்கைப் பாராளுமன்றத்தினால் "காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் சட்டம்" உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் அமுலாக்கத்துக்கு வரும்போது காணாமற்போன ஆட்கள் அலுவலகம் அமைக்கப்படும்.

இச்சட்டத்தின் வெளிப்படையான இலக்குக்குழு காணாமலாக்கப்பட்டோரும் அவர்களது உறவுகளும் ஆவர். இச்சட்டத்தின் வாயிலாகக் கையாளப்படப்போகும் விடயம் அந்த இலக்குக்குழு எதிர்கொண்ட பாரதூரமான பாதிப்புகள் ஆகும். மேலும் அவ்விடயம் மனித குலத்திற்கு எதிரான பாரதூரமான குற்றச்செயலும் ஆகும். எனவே இச்சட்டத்தின் வெளிப்படையான இலக்குக்குழு இச்சட்டம் பற்றியும் இது உருவாக்கவுள்ள அலுவலகம், அதன் செயற்பாடுகள், இம்முன்னெடுப்பின் காரணமாகக் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளைச் சூழ உருவாகியுள்ள நிர்ப்பந்த நிலைமைகள் பற்றியும் தேவையான புரிதலைப் பெற்றிருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. இவற்றின் தொடர்ச்சியாக தனிப்பட்ட முறையிலும் சமூகம் சார்ந்தும் வரக்கூடிய அண்மைக்கால, நீண்ட கால பின்தொடர் விளைவுகள் பற்றிக் கருத்தில்கொள்ள வேண்டியது அவசியமானதாகிறது.

இந்த ஆவணம் மேற்குறித்த நோக்கத்தை அடையும் முகமாக பின்வரும் கேள்விகளுக்கு விடைகாண முயலுகிறது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் (குடும்பங்கள்) எந்த நிலையில் நின்று இதனை அணுகுவது, அவர்களுடைய எதிர்பார்ப்புகளை இவ்வலுவலகம் எவ்வளவிற்கு நிறைவேற்றப் போகிறது, அலுவலகம் செயற்படும் நிலையில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் (குடும்பங்கள்) எந்தெந்த விடயங்களில் கவனங்கொண்டு செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பகுதி 1 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் (குடும்பங்கள்) எந்த நிலையில் நின்று இதனை அணுகுவது?

இச்சட்டம் உருவான அண்மைக்காலத்தில் இது பற்றி ஆதரிப்பதும் எதிர்ப்பதுமான பல்வேறு பிரதிபலிப்புகள் பல்வேறு தரப்பினரால் வெளிப்படுத்தப்பட்டன. சட்ட உருவாக்கத்தின்போது ஒரு புறத்தில் பாராளுமன்றத்தில் சட்டம் பற்றிய விவாதங்களுக்கு அனுமதியளிக்கப்படவில்லை என்றும் மறுபுறத்தில் காணாமலாக்கப் பட்டோரின் உறவுகள் (சட்டத்தின் இலக்குக் குழுவான பாதிக்கப்பட்ட தரப்பினர்) தாம் போதியளவு கலந்துரை யாடப்படவில்லை (தமது கருத்துக்கள் செவிசாய்க்கப்படவில்லை) என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இன்னுமொரு பக்கமாக சில சிவில் சமூக அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்களாலும், தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகளாலும், சர்வதேச சமூகத்தினாலும் இச்சட்ட உருவாக்கம் சரியான திசையிலான ஒரு முன்னெடுப்பாகப் பாராட்டப்பட்டது. அதேவேளை இன்னும் சில சிவில் சமூக அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்களால் இச்சட்டம் விமர்சனரீதியான கண்ணோட்டத்துடன் பார்க்கப்பட்டது. அத்துடன் சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இது தொடர்பான விடயங்கள் அணுகப்பட வேண்டும் என்று கருத்துரைக்கப்பட்டு வருகிறது.

சட்டம் அங்கீகரிக்கப்பட்டு 8 மாதங்கள் கடந்த பின்னரும் அதனை அமுலாக்கும் செயற்பாடுகள் உண்மையான அக்கறையுடன் தொடங்கப்படவில்லை. மாறாக, சட்டத் திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டு இவ்வலுவலகம் தனது செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக வெளியாரிடமிருந்து சுயாதீனமாக நிபுணத்துவ / தொழில்நுட்ப உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான விடயங்கள் வெளியே நடைபெற்றுக் கொண்டிருக்க பாதிக்கப்பட்ட தரப்பினரான காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மேலும் மேலும் விரக்தியடைந்த நிலைக்குள்ளாகி வருவது வெளிப்பட்டு வருகிறது. அநேகமான தாய்மார்கள் 'எமக்கு இன்னுமொரு அலுவலகம் தேவையில்லை; எமது பிள்ளைகளே எமக்கு வேண்டும்' என்று கருத்து வெளியிட்டு வருகிறார்கள் உறவினர்கள் தமது காணாமலாக்கப்பட்ட உறவினர்களை வேண்டி வீதிகளில் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டுவருகிறார்கள்.

இத்தகைய ஒரு சூழலில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஒவ்வொருவரும் எந்த நிலையில் நின்று காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை அணுகுவது என்பது மிகவும் சிக்கலானதொன்றாகிறது. இவ்வலுவலகத்தை அறிவுபூர்வமான வழியில் அணுகுவதற்கு (தொடர்புபட்டு வேலை செய்வதற்கு) பல்வேறு கோணங்களிலான புரிந்துகொள்ளல் தேவையானதாகும். ஒரு அரசின் தனது பிரசைகளுக்கான பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு, இலங்கையின் போர் முடிவின் பின்னரான நீதிக்கான முயற்சிகள் மற்றும் இலங்கையில் இவ்வலுவலகம் உருவாகும் பின்னணி, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஆட்படும் தமது உணர்ச்சி நிலைப்பட்ட சூழல் போன்றன அவ்விடயங்களுட் சிலவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் பொறுப்புக் கூறும் கடப்பாடு

மக்கள் ஒன்று சேர்ந்து அரசை அமைக்கிறார்கள். அரசு அமையும்போது அம்மக்கள் அந்த அரசின் பிரசைகள் ஆகிறார்கள். அதன்வழி அம்மக்களே (பிரசைகளே) அவ்வரசினுடைய இறைமையை ஆக்குகிறார்கள் ஆணையை வழங்குகிறார்கள். இதன் மூலம் ஒரு அரசு எந்த மக்கள் கூட்டத்தின் இறைமையுடையதாக இருக்கிறதோ அவ்வரசு அம்மக்கள் தொடர்பிலான அனைத்திற்கும் பொறுப்புடையதும் ஆகிறது. இதன்வழி அரசுக்கு தனது பிரசைகள் தொடர்பிலான பொறுப்புக் கூறும் கடப்பாடு தோன்றுகிறது. வெளி அழுத்தங்கள் இல்லாமலே பொறுப்புக் கூறும் கடப்பாடு இயல்பில் வெளிப்பட வேண்டும்.

அரசாங்கமானது தனது அரசின் செயற்படும் பிரதிநிதியாக இருக்கிறது. அரசின் ஒரு பகுதிப் பிரசைகளுக்கு பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டமை வெளிப்படையாக உள்ள நிலையில் ஒரு அரசாங்கமானது அவ்வாறு ஏதும் நிகழவில்லை எனச் சாதிப்பது அல்லது பொறுப்புக் கூறும் கடமையை தவிர்ப்பது / இழுத்தடிப்பது பாதிப்பை எதிர்கொண்ட மக்களை - பிரசைகளை - அவ்வரசின் இறைமையை ஆக்கும் மக்களாக, ஆணையை வழங்கிய மக்களாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்துவதாகும்.

மேற்கூறிய கசப்பான உண்மைக்கு இன்னுமொரு பக்கமும் உண்டு. ஒரு பகுதிப் பிரசைகளை அரசு தனது பகுதியாகக் கொள்ளாத நிலையில் அம்மக்களின் இறைமை தனித்துவிடுகிறது. சுயாதீனமடைந்துவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நடைபெற்ற காலப்பகுதியிலும் குறிப்பாக இறுதிப் போர் மற்றும் அது முடிவுற்ற காலப்பகுதியிலும் இலங்கையின் ஒரு பகுதிப் பிரசைகளுக்கு பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. இது இனரீதியாக வேறுபடுத்தக் கூடிய தன்மையைக் கொண்டிருந்தது. போர் முடிவுற்ற பின்னர் இந்தப் பாரதூரமான பாதிப்புகள் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புக் கூறும் கடப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டியிருந்தது. அவ்வாறானதொரு பொறுப்புக் கூறும் வெளிப்பாட்டுக்காக இலங்கை அரசாங்கம் நீதிக்கான செயன்முறை ஒன்றை முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறது. இந்தச் செயன்முறை "நிலைமாறுகால நீதிச் செயன்முறை" என அரசாங்கத்தினால் அழைக்கப்படுகிறது.

இந்த நீதிக்கான செயன்முறை பற்றிய தகவல்கள் தொடர்பூடகங்கள் ஊடாக மக்களில் அநேகமானோரைச் சென்றடைந்திருக்கிறது. இத்தகவல்கள் பொதுவில் இலங்கை முழுவதற்கும் சென்றடைந்திருந்தாலும் வடக்குக் கிழக்கில் வாழும் மக்களே இது தொடர்பில் துலங்கலைக் காட்டுகிறார்கள். அதிலும் குறிப்பாக போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களே கூடுதல் அக்கறைகாட்டிச் செயற்பட முயற்சிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமாறுகால நீதிச் செயன்முறை

நிலைமாறுகால நீதிச் செயன்முறை என்பது ஒரு சமுதாயத்தில் போர் அல்லது அதுபோன்றவொரு மனிதரால் ஏற்படுத்தப்பட்ட மனிதகுலத்திற்கெதிரான பாரதூரமான அனர்த்தம் நடந்து முடிந்த நிலையிலிருந்து அச்சமுதாயம் சாதாரண வாழ்வு மற்றும் அபிவிருத்திச் சூழலுக்குள் செல்வதற்கு இடையிலான காலப்பகுதியில் அனர்த்தத்தில் நிகழ்ந்த மனிதகுலத்திற்கெதிரான விடயங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொள்ள எத்தனிக்கும் செயன்முறை ஆகும். அறிமுறையின்படி இந்நீதிச் செயன்முறை அனர்த்தத்தின் பாதிப்புகளை ஆற்றுப்படுத்தும் அனர்த்தத்துக்குக் காரணமான முரண்பாடுகளைக் களையும் நோக்கங்களை ஒருங்கே கொண்டிருக்க வேண்டும்.

நிலைமாறுகால நீதிச் செயன்முறையானது போர்க்காலத்திலும் அதன் தொடர்ச்சியாகவும் நிகழ்ந்த மனிதகுலத்திற்கெதிரான பாரதூரமான விடயங்கள் பற்றிய உண்மையைக் கண்டறிதல், அவ்வுண்மைகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல், பாதிப்புகளுக்கான இழப்பீட்டை வழங்குதல் என்பனவற்றுடன் மீண்டும் அவ்வகையான மனிதகுலத்திற்கெதிரான பாரதூரமான விடயங்கள் நிகழாமலிருப்பதற்கான கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் சூழலை ஏற்படுத்தல் என்பதையும் உள்ளடக்கும்.

காணாமலாக்கப்படுதல் என்பது மனிதகுலத்திற்கெதிரான பாரதூரமான குற்றமாகும். காணாமலாக்கப்பட்டோரும் அவர்களுடைய உறவுகளும் போரினால் பாதிப்புக்குள்ளானவர்களுள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தரப்பினருள் கொள்ளப்பட வேண்டியவர்கள். இந்த வகையில் "காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்" இலங்கையின் நிலைமாறுகால நீதிச் செயன்முறையின் ஒரு பகுதியாக வருகிறது. சட்டத்தின் விளக்குதலின்படி, இச்செயலகம் நிலைமாறுகால நீதிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறையின் நான்கு அம்சங்களுள் முதலாவதான "உண்மையைக் கண்டறிதல்" எனும் அம்சத்தினுள் அடங்கும் பல்வேறு விடயங்கள் மற்றும் செயற்பாடுகளுள் ஒன்று ஆகும்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் வாயிலாக காணாமலாக்கப்பட்டோரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் "பரணகம ஆணைக்குழு (காணாமல்போனோர் ஆணைக்குழு)" குறிப்பாக காணாமல்போனோர் பற்றிய முறைப்பாடுகளைப் பதிவுசெய்து சாட்சியங்களை விசாரணை செய்யும் ஆணை வழங்கப்பட்டதொன்றாகும்.

இந்த ஆணைக் குழுக்களுக்கு அப்பால் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஆணை அடிப்படையில் காணாமல்போனோருடைய கதியினை அறிந்து கொள்வதாகும். சட்டம் குறிப்பிடும் ஏனைய நோக்கங்கள் மற்றைய அம்சங்களுக்கான பரிந்துரைகள் மற்றும் வழிகளைக் கண்டறிதலாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, மற்றைய அம்சங்களை அடைவது இச்சட்டம் வழங்கும் பணியாணைக்குள் அடங்கவில்லை. மேலும் சட்டத்தின் 13(2) பிரிவின்படி இவ்வலுவலகச் செயற்பாடுகளின் மூலமாகக் கண்டறியப்படும் முடிவுகள் (வெளிப்பாடு) நீதியைத் தேடும் சட்ட நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்லாதவாறு தெளிவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது (**சட்டத்தின் பிரிவு 13(2): காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் முடிவுகள் ஏதேனுமொரு குற்றவியல் அல்லது குடியியல் பொறுப்பீற்கு இட்டுச் செல்லலாகாது**). இவை எல்லாம் சேர்ந்து இலங்கையில் தொடங்கியுள்ள நிலைமாறுகால நீதிச் செயன்முறையின் முழுமையான நடைமுறை நகர்வுக்கான ஊக்கத்தில் சந்தேகத்தை உண்டாக்குகிறது. இன்னுமொரு வழியில் கூறினால் பொறுப்புக் கூறும் கடப்பாட்டின் மீதான அரசாங்கத்தினுடைய பற்றுறுதியை சந்தேகத்திற்குள்ளாக்குகிறது. ஏனெனில் தனது பிரசைகளுக்கான அரசின் பொறுப்புக் கூறும் கடப்பாடு பாதிக்கப்பட்ட பிரசைகளுக்கு உண்மையைக் கண்டறிந்து கூறுவதுடன் முடிவடைந்து விடுவதில்லை. அரசு அப்பிரசைகள் சார்பில் நின்று நீதியை நிலைநாட்ட வேண்டும் பாதிப்புகளுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்பீட்டை வழங்க வேண்டும் அல்லது இழப்பீடு வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

ஏதாவதொரு பாதிப்பை அனுபவித்த அல்லது அனுபவிக்கும் தரப்பினர் எப்போதும் உணர்வு ரீதியாக ஆட்பட்ட நிலையிலேயே பாதிப்புடன் தொடர்புடைய விடயங்களை விளங்கிக்கொள்ளு வார்கள். இது பொதுவான மனித இயல்பாகும். இதன் விளைவாக ஆதாரமில்லாது நம்புதல், ஆதாரங்கள் இட்டுச் செல்லும் முடிவுகளுக்கு எதிராக நம்பிக்கை கொள்ளுதல் போன்ற அறிவுபூர்வமற்ற தர்க்கத் தொடர்புகளற்ற செயற்பாடுகளில் ஈடுபடும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். பாதிப்புகள் தொடர்பில் நிகழும் விடயங்களை தமக்குச் சாதகமானதொன்றாகவோ அல்லது தமக்குப் பாதகமானதொன்றாகவோ போதியளவு தர்க்கச் செயற்பாடுகள் இன்றி எடுத்துக் கொள்ளும் இயல்புகளும் பொதுவாகக் காணப்படும். காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இவ்வகையான நிலைக்கு மிக எளிதில் ஆட்பட்டிருப்பார்கள். ஆனால் அறிவுபூர்வமான அணுகுதல் இல்லாமல் அவர்களுடைய பிரச்சனைக்குத் தீர்வினைத் தேட முடியாது.

முன்னைய பந்திகளில் எடுத்துக் கூறப்பட்டது போல காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் நிகழும் விடயங்கள் மிகவும் குழப்பகரமானவை் உண்மையான தீர்வு இலக்கு நோக்கி சென்றுவிடாதிருக்கம்படி கையாளப்படுகிறது எனக்கொள்ளு வதற்குப் போதியளவு ஆதாரங்களை வெளிப்படுத்துபவை. இச்சூழமைவில் தமது பிரச்சனைக்குத் தீர்வினைத் தேடும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தர்க்கரீதியாக தமது பிரச்சனையை அணுகுவதற்கு தம்மை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக தொடர்ச்சியாக போதியளவு தகவல்களைப் பெறவும் அவற்றின் உண்மைத் தன்மை பற்றி தெளிவேற்படுத்திக் கொள்ளவும் முயன்று கொண்டிருக்க வேண்டும் தமக்குள் சேர்ந்தியங்க வேண்டும் தர்க்கரீதியான தெளிவைப் பெறும் நோக்குடன் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி தம்மைச் சார்ந்த விடயங்கள் பற்றி முடிவுக்கு வருதல் வேண்டும். இவை போன்ற செயற்பாடுகள் தமது பிரச்சனை தொடர்பான விடயங்களை அறிவுபூர்வமாக அணுகும் இயலுமையை அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பகுதி 2 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் சட்டத்தின் சரத்துகள் போரினால் பாதிக்கப்பட்டோரின் (காணாமலாக்கப்பட்டோரினதும், அவர்களுடைய உறவுகளினதும்) எதிர்பார்ப்புகளை எவ்வளவிற்கு நிறைவேற்றுகிறது?

- காணாமல்போனவர்கள் என இச்சட்ட வரைவிலக்கணத்தால் கருதப்படுவோர் உண்மையில் "வலிந்து காணாமலாக்கப் பட்டோர்" ஆவர். ஒரு நபரைக் காணாமல் போகச் செய்வது ஒரு குற்றமாகக் கொள்ளப்படுவதற்கு இந்தக் கருத்து அடிப்படையானது. சட்ட உருவாக்கச் செயற்பாடுகளின்போது காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளாலும் செயற்பாட்டாளர் களாலும் முன்வைக்கப்பட்ட இக்கருத்து கருத்தில் கொள்ளப்படவில்லை. அதாவது "காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்" அவ்வாறான அடிப்படையை ஏற்றுக்கொண்டு உருவாக்கப்படவில்லை. இது நீதிக்கான தேடலில் பாரிய பின்னடைவுக்கான அடித்தளத்தை உருவாக்குகிறது.

  தற்போது வலிந்து காணாமலாக்கப்படுதல் பற்றிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நிலையிலுள்ளது. இது இனிவரும் காலத்தில் நிகழக்கூடிய காணாமலாக்கப்படும் சம்பவங்களை ஒரு குற்றமாகக் கையாளுவதற்கே செல்லுபடியானதாகும். மேலும் இச்சட்டமூலம் கூட எந்தளவிற்கு வலுவுள்ளதாக நிறைவேற்றப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும்.

- இலங்கையில் இனமுரண்பாடு மற்றும் அது தொடர்பான உள்நாட்டுப் போர் ஒன்றின் முடிவின் பின்னர் அதனால் ஒரு பகுதி மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பல்வேறு பாரதூரமான பாதிப்புகளில் ஒன்றினை அணுகுவதற்காக இச்சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் இலங்கையில் வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியில் நிகழ்ந்த மனிதரால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தத்தினால் காணாமலாக்கப்பட்டோரையும் உள்ளடக்கிச் செயற்படக் கூடியவாறு இச்சட்டம் பொதுமைப்படுத்தப்பட்டுள்ளது. இது உண்மையைக் கண்டறிவது மட்டுமல்லாது மீள நிகழாமையை உறுதி செய்யும் பொருத்தமான கட்டமைப்பு மாற்றங்களை அடைவது உட்பட அனைத்து விடயங்களிலும் எதிரான தாக்கத்தை ஏற்படுத்தும்.

- இச்சட்டத்தின் மூன்றாவது குறிக்கோள் 2(இ):
'இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாகக் காணாமற் போன ஆட்களினதும் அவர்களின் உறவினர்களினதும் உரிமைகளையும் அக்கறைகளையும் பாதுகாப்பதற்கும்' என்று குறிப்பிடுகிறது. இது இவ்வலுவலகத்தினால் கண்டறியப்படும் முடிவுகள் தொடர்பில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் அக்கறை ஒரு சட்ட நடவடிக்கையாயின் அதற்கு வழிவிடுகிறது. ஆனால், (ஏற்கனவே குறிப்பிட்டது போல) சட்டத்தின் 13(2) பிரிவின்படி இவ்வலுவலகச் செயற்பாடுகளின் மூலமாகக் கண்டறியப்படும் முடிவுகள் (வெளிப்பாடு) நீதியைத் தேடும் சட்ட நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்லாதவாறு தெளிவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது ***(சட்டத்தின் பிரிவு 13(2): காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் முடிவுகள் ஏதேனுமொரு குற்றவியல் அல்லது குடியியல் பொறுப்பிற்கு இட்டுச் செல்லலாகாது).*** எனவே இவ்விரண்டு சரத்துகளும் ஒன்றையொன்று முரண்படும் தன்மை கொண்டவை. பின்னையது முன்னையதினால் ஏற்படும் தொடர்விளைவுகளை கட்டுப்படுத்தப் பாவிக்கப்படலாம்.

- திருத்தம் செய்வதற்கு முன்னர் இச்சட்டத்தின் பிரிவு 11(அ) இன்படி அலுவலகமானது அதன் பணியாணையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்துவதற்கு அவசியமானவாறாக எவரேனுமாளுடன் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்புடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு இடமளிப்பதாக இருந்தது. ஆனால் இச்சட்டம் அமுலுக்கு வருமுன்னரே இது குறித்துச் சட்டத் திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டு அந்தப் பிரிவு முற்றாக அகற்றப்பட்டுள்ளது. இது தனது செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக வெளியாரிடமிருந்து சுயாதீனமாக நிபுணத்துவ / தொழில்நுட்ப உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளும் இவ்வலுவலகத்தின் முயற்சிகளை மட்டுப் படுத்துகிறது.

❖ காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு 7 ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்களுள் ஒருவர் தவிசாளராக நியமிக்கப்படுவார். ஆணையாளர்களதும் தவிசாளரதும் நியமனம் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மேல் சனாதிபதியால் செய்யப்படும்.

இவ்வலுவலகத்தினது சுயாதீனத்தன்மை ஆணையாளர்களைச் சார்ந்ததாகும். அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மேல் நியமனங்கள் செய்யப்படுவதாயினும் பேரவையின் அரசியல் சாய்வுத்தன்மை காரணமாக ஆணையாளர், தவிசாளர் தெரிவுகள் அலுவலகத்தின் சுயாதீனத் தன்மையைப் பாதிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பகுதி 3 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் செயற்படும் நிலைக்கு வரும்போது காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் (குடும்பங்கள்) எந்தெந்த விடயங்களில் கவனங்கொண்டு செயற்பட வேண்டும்?

❖ காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஒவ்வொருவரும் தாம் தேடுவோரின் கதி பற்றி அனுமானித்திருக்கும் முடிவுகள் வெவ்வேறானவை. அவர்கள் அந்த இழப்புகளுக்கான பரிகாரம் (இழப்பீடு) தொடர்பில் வெவ்வேறு எதிர்பார்ப்புகளுடன் இருக்கிறார்கள். இவர்கள் தாம் தேடுவோர் பற்றிய முடிவுகளுக்காக சேர்ந்து செயலாற்றும் போது மற்றைய ஒவ்வொருவருடைய இவ்வாறான வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும்.

உதாரணமாக நீண்ட காலத்திற்கு முன்னர் (80 களில்) காணாமலாக்கப்பட்ட ஒருவரின் தாய் தற்போது தனது பிள்ளை திரும்ப வரமாட்டார் எனும் முடிவுக்கு வந்திருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். அவரைப் பொறுத்தவரை தற்போதைய நிலையில் தனது பிள்ளையின் இழப்பிற்குப் பரிகாரம் பெறுவது பொருத்தமானது என்ற நிலைப்பாட்டிற்கு வந்திருப்பதற்கான சாத்தியம் அதிகமாகும். அது அவரது குறித்த பிள்ளையின் சந்ததிக்கோ அல்லது அவரது குடும்பத்திற்கோ / நெருங்கிய உறவினருக்கோ பயனளிப்பதாக இருப்பது அந்நிலைப்பாட்டிற்குக் காரணமாக இருக்கக் கூடும். மாறாக இறுதிப் போர் முடிந்தபோது (2009 இன் நடுப்பகுதியில்) தடைமுகாம்களூடாக வெளியேறும் போது சரண்டைந்தவரை / தாம் படைகளிடம் ஒப்படைத்தவரைத் தேடும் ஒரு தாய் தனது பிள்ளை எங்கோவொரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்னும் முடிவில் இருப்பதற்கான வாய்ப்புகளே அதிகமாகும். அவர் தனது பிள்ளையை மீட்பதை ஒரே குறிக்கோளாகக் கொண்டிருப்பதற்கான சாத்தியம் அதிகமாகும். ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுகள் எவையும் அவருக்கு முக்கியமற்றவையாகத் தென்படக்கூடும். ஒருவேளை தேடப்படுபவர் உயிருடன் இல்லை என அவர் உறுதிப்படும் சந்தர்ப்பத்தில் தனக்கும் தனது பிள்ளைக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதியைத் தேடுவதே அவரது முதலாவது தெரிவாக மாறுவதாக இருக்கும். முன்னர் குறிப்பிட்டது போல காணாமலாக்கப் பட்டோரின் உறவுகள் சேர்ந்து செயலாற்றும்போது இவ்வகையான தமக்கிடையிலான உணர்வுநிலைப்பட்ட வேறுபாடுகளையும் அதன் பின்னணிக் காரணங்களையும் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சேர்ந்து செயலாற்றும் போது அவர்களில் சிலரது நிலைப்பாடுகள் ஏனையோருடைய நிலைப்பாடுகளுடன் முரண்படும் பட்சத்தில் அதிலிருந்து பொருத்தமான மேம்பட்ட நிலைப்பாடுகளுக்கு வருவதற்கு இடைவிடாது முயற்சிக்க வேண்டும். மேம்பட்ட நிலைப்பாடுகளுக்கு அனைவரும் வந்தடைய அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும். இவ்வாறான செயன்முறை மற்றும் அடைவுகளை இயற்கை நீதி, ஒட்டுமொத்த சமூகத்தின் நீண்டகால நன்மை என்பவைகளின் அடிப்படையில் அணுகுவதே சரியானதாகும்.

❖ தமது உறவுகள் காணாமலாக்கப்பட்டமை மனிதகுலத்திற்கு எதிரான பாரதூரமான குற்றமொன்று என்பதை காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் பரிந்துகொண்டு, அந்த நிலைப்பாட்டில் நின்றுகொண்டு தாம் எதிர்கொள்ளும் விடயங்களை அணுக வேண்டும். அத்துடன் இந்த அநீதி வேண்டுமென்றே இழைக்கப்பட்டதொன்று என்பதையும் இனரீதியான உந்துதல் கொண்டதென்பதையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இன்னுமொரு வழியில் கூறினால் இந்த அநீதிச் செயல்களை தனித்தனியே தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுக்கு எதிரானது எனப்பார்ப்பது இச்செயற்பாடுகளின் பின்னாலுள்ள உந்துதலைப் புரிந்துகொள்ள உதவியளிக்காது.

தமது ஏனைய உறவுகளுக்கு, சந்ததிகளுக்கு, தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்திற்கு இவ்வாறான பாரதூரமான நிலையொன்று இனிமேலும் ஏற்படக்கூடாதாயின், மீண்டும் நிகழாமைக்குத் தேவையான கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியதன் தேவையைப் புரிந்துகொள்ள வேண்டும். அக்கட்டமைப்பு மாற்றங்களைச் சரியாக இனங்காண இச்செயற்பாடுகளின் பொதுவான பண்புகளை - போக்குகளை விளங்கிக் கொள்ளவும் வெளிக்கொண்டுவரவும் வேண்டும் இச்செயற்பாடுகளின் பின்னாலுள்ள உந்துதலைச் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும்.

❖ போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் வெவ்வேறு சூழ்நிலைகளிலும் சம்பவங்களின்போதும் கைதுசெய்யப்பட்டு / கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட ஒருவர் பற்றிய நீதி வழங்கும் செயன்முறை பொதுவாகக் குற்றவியல் சட்டங்களுக்குக் கீழானதாக இருக்கும். இறுதிப் போர் முடிந்தபோது தடைமுகாம்களூடாக வெளியேறும்போது சரணடைந்தவர் / படைகளிடம் ஒப்படைக்கப்பட்டவர் காணாமலாக்கப்பட்டிருந்தால் அது தொடர்பான நீதிக்கான செயற்பாடுகள் பிரத்தியேகமான தன்மை கொண்டவையாக இருக்கும். ஏனெனில் அவ்வாறு சரணடைந்தவர்கள் / ஒப்படைக்கப்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டமை ஒரு குறிப்பிட்ட குறுகிய காலப்பகுதியில் செறிவாக நிகழ்த்தப்பட்ட ஒரு குறித்த போக்கினை வெளிப்படுத்தும் சம்பவங்களாகும். அத்துடன் இது போர்க்குற்றத்தின் கீழான ஒரு குற்றமாகும். எனவே மேற்கூறிய காணாமலாக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமைகள் இரண்டையும் பொதுவான ஒரு வகையின் கீழ் கொண்டுவருவது அல்லது கையாளுவது முன்னர் ஒரு பந்தியில் குறிப்பிட்டது போல உண்மையைக் கண்டறிவது மட்டுமல்லாது மீள நிகழாமையை உறுதி செய்யும் பொருத்தமான கட்டமைப்பு மாற்றங்களை அடைவது உட்பட அனைத்து விடயங்களிலும் எதிரான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இந்த இருவகையான காணாமலாக்கப்பட்ட நிலமைகளையும் வெவ்வேறு அடிப்படைகளில் அணுகுவதில் கவனமாக இருக்க வேண்டும்.

❖ போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் வெவ்வேறு சூழ்நிலைகளிலும் சம்பவங்களின் போதும் கைதுசெய்யப்பட்டு / கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் கூட ஒட்டுமொத்தமாக ஆராயப்படும்போது ஒரு போக்கினை - ஒரு உந்துதலைக் கொண்டிருப்பது புலப்படும். காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளும் அவர்களுடைய நீண்ட கால நலன்களுக்காகச் செயற்படுபவர்களும் மேற்கூறிய தன்மையினை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்துவதில் கவனமாக இருத்தல் வேண்டும். இது மீள நிகழாமலிருத்தலை உறுதிப்படுத்தும் கட்டமைப்பு மாற்றங்களைக் கண்டறிவதற்கு ஆதாரமான பல விடயங்களில் ஒன்றாகும்.

❖ காணாமற்போன ஆட்கள் அலுவலகத்தின் ஆட்களைத் தேடும், அவர்களது கதியைக் கண்டறியும் செயற்பாடுகள் அநேகமாக காலத்தை பெருமளவில் எடுக்கும் தன்மை உடையதாக இருக்கும். இது சம்பந்தப்பட்டவர்களைச் சோர்வடையச் செய்யக் கூடும். இத்தகைய சூழலில் போர் முடிவில் சரணடைந்து / ஒப்படைக்கப்பட்டுக் காணாமலாக்கப்பட்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கான நீதியைப் பெறும் செயற்பாடுகளில் தாமத மேற்படுவதை அனுமதிக்கக்கூடாது.

- ❖ அரசின் பொறுப்புக் கூறும் கடப்பாடு பற்றி முன்னைய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறையாகக் கொண்டுவரப்படும் "காணாமற்போன ஆட்கள் அலுவலகம்" பொறுப்புக் கூறலின் முழுப் பரிமாணத்தையும் அடைய முயலவில்லை. மாறாக அவ்வலுவலகத்தின் பணியாணையை அடைவதில் கூட வேண்டுமென்றே மட்டுப்பாடுகள் ஏற்படும் சூழல் ஏற்படுத்தப்படுகிறது. இது பாதிக்கப்பட்ட தரப்பினரான ஒரு மக்கள் கூட்டத்தை அரசு தனது பிரசைகளாகக் கொள்ளுதல் தொடர்பிலான சிக்கலில் இருந்து தொடங்குகிறது. இச்சிக்கல் அரசிற்கு உண்மையான பொறுப்புக் கூறும் கடப்பாட்டை வெளிப்படுத்துவதிலுள்ள பற்றுறுதியின்மீது கேள்வியை எழுப்புகிறது.

இச்சூழ்நிலையில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் மட்டுமல்லாது பாதிக்கப்பட்ட தரப்பினர் எதிர்பார்க்கும் பொறுப்புக் கூறும் வழியாக உள்ளகப் பொறிமுறையை ஏற்றுக்கொள்வது சரியானதா எனும் கேள்வி எழுகிறது. இதன் காரணமாகவே விசாரணைகளுக்கான, சட்ட நடவடிக்கைகளுக்கான, நீதி வழங்கலுக்கான சர்வதேசப் பொறிமுறைகள் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் முன்வைக்கப்பட்டன. மாற்றீடாக சர்வதேச தரப்புகளால் சர்வதேச-உள்ளக இணைப் பொறிமுறை முன்வைக்கப்பட்டது. சர்வதேசப் பொறிமுறை மறுக்கப்பட்ட நிலையில் பொறுப்புக் கூறும் வழிமுறையாக சரியான அடிப்படை அம்சங்களைக் கொண்ட சர்வதேச-உள்ளக இணைப் பொறிமுறையை ஏற்றுக்கொள்வது யதார்த்தமானதாகும்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை

அ. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம்

ஆ. 2017 ஆம் ஆண்டிளன் 9 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம் (திருத்தம்)

இ. அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின் வெளியீடு - Issue Brief No. 2: Families of the Disappeared and the OMP: Is there a path forward? May 9, 2017

ஈ. சட்டக் கற்கைகளுக்கான தெற்காசிய நிலையத்தின் வெளியீடு- காணாமற்போனோர் அலுவலகம் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

உ. இவ் விடயத்தில் நீண்ட காலமாக செயற்படும் செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org